ஆராய்ந்து, அந்த இடங்களில் தொழிற்பேட்டைகளையோ அல்லது தொழிற்பூங்காக்களையோ உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை அரசு நிச்சயமாக ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொழிற்பேட்டை நிறைந்த தொகுதி. அதில் 5 வருடங்களுக்குமேல் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்களா? மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நீங்கள், தொழிற்பேட்டை வேண்டும், தொழில் வேண்டும் என்று கேட்டால் பதில் சொல்வார்கள். இதற்குத் தனியாக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

57—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***12023—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2022 ஏப்ரல் 6]

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பவானிசாகர் தொகுதியில் ஏழை, எளிய மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, கிராமப்புறங்களில் இட நெருக்கடியான இடத்தில் அதிக எண்ணிக்கையில் மக்கள், தினமும் கூலிவேலை செய்து வாழ்ந்து வருகிறார்கள். தற்போது நகராட்சி, பேரூராட்சிகளில் வாழும் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தரப்படுகின்றன. ஆகவே, கிராமங்களில் வாழும் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள மக்களிடத்தில் எப்படி எதிர்பார்ப்பு இருக்கிறது என்பதையெல்லாம் ஆய்வு செய்து, நிலம் கிடைப்பதைப் பொறுத்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கான ஆய்வு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. தற்போது அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒரு வீட்டுக்கு 1 இலட்சம் ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த கொரோனா காலக்கட்டத்தில் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குக் குறைவான விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகளின் பங்கு என்று ஒன்றிருக்கிறது. அதைத்தான் இப்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைய சலுகைகளை இப்போது அதில் செய்திருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பிரச்சினை அதில் வருவதற்கு வாய்ப்பில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடியார் அவர்கள், என்னுடைய தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதியில், கடந்த ஆண்டு 1,836 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தார். அவை தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது, அரூரைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், வீடுகள் கேட்கிறார்கள். அரூரிலிருந்து, கீரைப்பட்டி செல்லும் வழியில் ஓட்டுமில் என்ற இடத்தில் 2½ ஏக்கர் நிலம் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் குடியிருப்புகள் கட்டித் தரப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகருக்கும் அவர் சொல்கின்ற இடத்திற்கும் நீண்ட தூரம். எனவே, அதை ஒரு தனிக் கேள்வியாகப் போட்டால் அதைப்பற்றிப் பரிசீலித்து, பதில் சொல்லலாம்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு குறு,*